ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ அட்டுக்குவி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அட்டுக்குவி ॥

## கோவர்த்தன கிரியைக் குடைகொள் வண்ணம்

‡அட்டுக் குவி சோற்றுப் பருப்பதமும்⋆
தயிர் வாவியும் நெய் அளறும் அடங்கப்
பொட்டத் துற்றி⋆ மாரிப் பகை புணர்த்த⋆
பொரு மா கடல்வண்ணன் பொறுத்த மலை⋆
வட்டத் தடங்கண் மட மான் கன்றினை⋆
வலைவாய்ப் பற்றிக் கொண்டு⋆ குறமகளிர்
கொட்டைத் தலைப் பால் கொடுத்து வளர்க்கும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (1)

வழுவொன்றும் இலாச் செய்கை வானவர் கோன்⋆
வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்டு⋆
மழை வந்தெழு நாள் பெய்து மாத் தடுப்ப⋆
மதுசூதன் எடுத்து மறித்த மலை⋆
இழவு தரியாததோர் ஈற்றுப் பிடி⋆
இளஞ்சீயம் தொடர்ந்து முடுகுதலும்⋆
குழவி இடைக் கால் இட்டெதிர்ந்து பொரும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (2)

அம் மைத் தடங்கண் மட ஆய்ச்சியரும்⋆
ஆனாயரும் ஆநிரையும் அலறி⋆
எம்மைச் சரண் ஏன்றுகொள் என்றிரப்ப⋆
இலங்காழிக் கை எந்தை எடுத்த மலை⋆
தம்மைச் சரண் என்ற தம் பாவையரைப்⋆
புனமேய்கின்ற மானினம் காண்மின் என்று⋆
கொம்மைப் புயக் குன்றர் சிலை குனிக்கும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (3)

கடு வாய்ச் சின வெங்கண் களிற்றினுக்குக்⋆
    கவளம் எடுத்துக் கொடுப்பான் அவன் போல்⋆
அடிவாய் உறக் கையிட்டெழப் பறித்திட்டு⋆
    அமரர் பெருமான் கொண்டுநின்ற மலை⋆
கடல்வாய்ச் சென்று மேகம் கவிழ்ந்திறங்கிக்⋆
    கதுவாய்ப் பட நீர்முகந்தேறி⋆ எங்கும்
குடவாய்ப் பட நின்று மழை பொழியும்⋆
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (4)

வானத்தில் உள்ளீர்! வலியீர் உள்ளீரேல்⋆
    அறையோ! வந்து வாங்குமின் என்பவன் போல்⋆
ஏனத்துருவாகிய ஈசன் எந்தை⋆
    இடவன் எழ வாங்கி எடுத்த மலை⋆
கானக் களி யானை தன் கொம்பிழந்து⋆
    கதுவாய் மதம் சோரத் தன் கை எடுத்து⋆
கூனல் பிறை வேண்டி அண்ணாந்து நிற்கும்⋆
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (5)

செப்பாடுடைய திருமால் அவன் தன்⋆
    செந்தாமரைக் கைவிரல் ஐந்தினையும்⋆
கப்பாக மடுத்து மணி நெடுந் தோள்⋆
    காம்பாகக் கொடுத்துக் கவித்த மலை⋆
எப்பாடும் பரந்திழி தெள் அருவி⋆
    இலங்கு மணி முத்து வடம் பிறழ⋆
குப்பாயம் என நின்று காட்சி தரும்⋆
    கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (6)

படங்கள் பலவும் உடைப் பாம்பரையன்⋆
    படர் பூமியைத் தாங்கிக் கிடப்பவன் போல்⋆
தடங்கை விரல் ஐந்தும் மலர வைத்துத்⋆
    தாமோதரன் தாங்கு தடவரைதான்⋆
அடங்கச் சென்றிலங்கையை ஈடழித்த⋆
    அனுமன் புகழ் பாடித் தம் குட்டன்களை⋆

குடங்கைக் கொண்டு மந்திகள் கண் வளர்த்தும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (7)

சல மா முகில் பல் கணப் போர்க்களத்துச்⋆
சர மாரி பொழிந்தெங்கும் பூசல் இட்டு⋆
நலிவான் உறக் கேடகம் கோப்பவன் போல்⋆
நாராயணன் முன் முகம் காத்த மலை⋆
இலைவேய் குரம்பைத் தவ மா முனிவர்⋆
இருந்தார் நடுவே சென்றணார் சொறியக்⋆
கொலை வாய்ச் சின வேங்கைகள் நின்றுறங்கும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (8)

வன் பேய்முலை உண்டதோர் வாய் உடையன்⋆
வன் தூண் என நின்றதோர் வன் பரத்தை⋆
தன் பேர் இட்டுக் கொண்டு தரணி தன்னில்⋆
தாமோதரன் தாங்கு தடவரை தான்⋆
முன்பே வழி காட்ட முசுக் கணங்கள்⋆
முதுகில் பெய்து தம் உடைக் குட்டன்களை⋆
கொம்பேற்றியிருந்து குதி பயிற்றும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (9)

கொடி ஏறு செந் தாமரைக் கைவிரல்கள்⋆
கோலமும் அழிந்தில வாடிற்றில⋆
வடிவேறு திருவுகிர் நொந்தும் இல⋆
மணிவண்ணன் மலையும் ஓர் சம்பிரதம்⋆
முடி ஏறிய மா முகில் பல் கணங்கள்⋆
முன் நெற்றி நரைத்தன போல⋆ எங்கும்
குடியேறி இருந்து மழை பொழியும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடையே⋆ (10)

‡அரவில் பள்ளி கொண்டரவம் துரந்திட்டு⋆
அரவப் பகை ஊர்தி அவனுடைய⋆
குரவிற் கொடி முல்லைகள் நின்றுறங்கும்⋆
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடைமேல்⋆

திருவிற் பொலி மறை வாணர் புத்தூர்த்
    திகழ்⋆ பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும்⋆
பரவு மனநன் குடைப் பத்தர் உள்ளார்⋆
    பரமான வைகுந்தம் நண்ணுவரே⋆ (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥